பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 12 2024 **SUNDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சிரியா தலைநகர் Damascus-ஸை கிளர்ச்சிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.
- ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின்கீழ், 68 கோடிக்கும் மேற்பட்ட அடையாள அட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- பிஜேபி தலைமையிலான மத்திய அரசு சிறந்த நிதி மேலாண்மைக் கொள்கைகளை கடைபிடித்து வருவதாக இந்திய தொழில் கூட்டமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.
- தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஃபெஞ்சல் புயல் பாதிப்புகளை மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு செய்தனர்.
- உலக செஸ் சாம்பியன் போட்டியின் 11-ஆவது சுற்றில் இந்தியாவின் குகேஷ் வெற்றிபெற்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

சிரியாவில் கிளர்ச்சிப்படையினர் அந்நாட்டு தலைநகர் Damascus-ஐ கைப்பற்றியுள்ளனர்.

இதன் காரணமாக, அந்நாட்டு அதிபர் திரு Bashar Al Assad அந்நாட்டை விட்டு இன்று வெளியேற உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் கிளர்ச்சிப்படையினர் நான்கு முக்கிய நகரங்களை கைப்பற்றியுள்ளனர்.

<<<<<<>>>>>

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின்கீழ், 68 கோடிக்கும் மேற்பட்ட அடையாள அட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

45 கோடிக்கும் கூடுதலான நோயாளிகளின் மருத்துவ ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த இயக்கத்தின்கீழ், ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவப்பணியாளர்கள் இணைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு சிறந்த நிதி மேலாண்மைக் கொள்கைகளை கடைபிடித்து வருவதாக இந்திய தொழில் கூட்டமைப்பின் இயக்குனர் திரு சந்திரஜித் பானர்ஜி பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து தங்களது கூட்டமைப்பு சார்பில் பல்வேறு பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக வளர்ச்சி விகிதம் சீராக உள்ளதாகவும் திரு சந்திரஜித் பானர்ஜி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவையில் புதிய உறுப்பினர்கள் இரண்டாவது நாளாக இன்றும் பதவியேற்றுக்கொண்டனர்.

இடைக்கால பேரவைத் தலைவர் திரு Kalidas Kolambkar அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

இதற்கிடையே, பேரவைத் தலைவர் பதவிக்கான தேர்தல் நாளை நடைபெறுகிறது.

இதற்கு பிஜேபி கூட்டணி சார்பில், பிஜேபி சேர்ந்த திரு Rahul Narvekar வேட்புமனு தாக்கல் செய்தார்.

இப்பதவிக்கு ஒருவர் மட்டுமே மனுதாக்கல் செய்துள்ளதால் போட்டியின்றி அவர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாகவும், இதற்கான முறையான அறிவிப்பு நாளை பேரவையில் வெளியிடப்படும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

பஞ்சாபில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் வரும் 21-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 7 மணி முதல், மாலை 4 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறும் என்றும், இந்த தேர்தலில் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு முடிந்தவுடன், வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்று அம்மாநில தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இந்த தேர்தலில் 37 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்களிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை முழுமையாக செயல்படுத்திய முதலாவது யூனியன் பிரதேசமாக சண்டிகர் உருவெடுத்துள்ளது.

செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த சண்டிகர் காவல்துறை தலைவர் திரு சுரேந்தர் யாதவ், வளர்ச்சியடைந்த இந்தியாவை பிரதிபலிக்கும் வகையில் இந்த புதிய சட்டங்கள் உள்ளதாக கூறினார்.

நீதித்துறையில் வெளிப்படைத்தன்மையை இந்த சட்டங்கள் உறுதி செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ராஜஸ்தான் வளர்ச்சியில் புதிய உச்சத்தை எட்ட அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் ஷர்மா கேட்டுக்கொண்டுள்ளார்.

உலக முதலீட்டாளர் மாநாடு ஜெய்பூரில் நாளை தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறவுள்ள நிலையில் இன்று இதுதொடர்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க ராஜஸ்தான் வளர்ச்சி உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

திறன் மேம்பாடு, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், வெளிப்படையான நிர்வாகம், புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கம் அளித்தல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் தமது அரசு ஈடுபட்டுள்ளதாகவும் திரு பஜன்லால் சர்மா கூறினார்.

<<<<<<>>>>>

தெலங்கானாவில் காங்கிரஸ் பொறுப்பேற்ற ஓராண்டில் விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்தது, புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கியது, கூடுதல் முதலீடுகளை ஈர்த்தது போன்ற சாதனைகளை படைத்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், நெல் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் 500 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கு தடையில்லா மின்சாரம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஓராண்டிற்குள் இதுபோன்ற பல சாதனைகளை தமது அரசு செயல்படுத்தி இருப்பதாகவும் திரு ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தில்லியில் ஆம் ஆத்மி அரசு அனைத்துத்துறைகளிலும் தோல்வியடைந்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

குப்பைகளை அகற்றுவது போன்ற முக்கிய பிரச்சினைகளை ஆம் ஆத்மி அரசு முறையாக கையாளவில்லை என்று பிஜேபி சார்பில் இன்று தில்லியில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஆம் ஆத்மி அரசு பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பதாகவும் பிஜேபி குறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகம் மற்றும் புதுவையில் ஃபெஞ்சல் புயல் பாதிப்புகளை மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு செய்தனர்.

இன்று கடலூர் மாவட்டடத்தில் வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்த உள்துறை இணைச்செயலர் திரு ராஜேஷ் குப்தா தலைமையிலான இந்த குழுவினர் பின்னர் புதுச்சேரி சென்றனர்.

அங்கு ஏற்பட்டுள்ள சேதங்களை இரண்டு குழுக்களாக பிரிந்து, ஆய்வு செய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத்தொடர்ந்து இன்று மாலை புதுச்சேரி ஆளுநர் திரு கைலாஷ் நாதன் மற்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமியுடன் மத்தியக்குழுவினர் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் பொலிவுறு மலைவாழ் வேளாண்மைத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மலைவாழ் மக்களின் வேளாண் நடைமுறைகளை மேம்படுத்தும் வகையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - கண்ணன் - 61 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சேதுராமனுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<<<<>>>>>

கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழாவில் God Father திரைப்படம் திரையிடப்பட்டது.

இந்த விழாவின் ஒரு பகுதியாக பல்வேறு கருத்தரங்குகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

<<<<<<>>>>>

இந்தியா – நேபாளம் கலாச்சார விழா இன்று Lumbini–ல் நடைபெற்றது.

இருநாடுகளுக்கு இடையேயான கலாச்சார பிணைப்பை எடுத்துரைக்கும் வகையான கருத்தரங்குடன் இந்த விழா தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக செஸ் சாம்பியன் போட்டியின் 11-ஆவது சுற்றில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் Ding Liren-ஐ வென்றார்.

சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் தற்போது ஆறு புள்ளிகளுடன் குகேஷ் முன்னிலை பெற்றுள்ளார்.

-----------

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் பட்டம் வென்றார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-17, 21-14 என்ற செட் கணக்கில், சீனாவின் Zhu Xuan Chen-ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் Tanisha Crasto – Ashwini Ponnappa இணையும் பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்த இணை, 21-18, 21-12 என்ற செட் கணக்கில் சீனாவின் Li Hua Zhou – Wang Zi Meng இணையை வென்றது.

--------------

தை-பே ஓபன் வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-------------

புதுதில்லியில் நடைபெற்று வரும் ஆசிய மகளிர் Handball சாம்பியன் போட்டியில் ஐந்து முதல் எட்டாவது இடத்திற்கான ஆட்டத்தில் இந்தியா – சிங்கப்பூரை வென்றது.

-------------

ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

---

துபாயில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் பங்களாதேஷ் 59 ரன் வித்தியாசத்தில் இந்தியாவை வென்ற து.

**<<<<<<END>>>>>>**